10
210
451

கலைமலர்

சமூகப் பொருளாதாரச் சீர்திருத்தக் கழக வெளியீடு

என் கடன் பணிசெய்து கிடப்பதே.

மாதப்பதிப்பு

மலர் 1 | 1914 பிப்ரவரி - மீ 1119-ஆ தைமீ 19 | இதழ் 8

GIFT OF THE GOVERNMENT OF MADRAS
10 FEB 1944

வாழ்க்கை எது

நச்சுமரம்
கமலா விமலாவின் கடவுள் பக்தி [தொடர்நாவல்]
கைத்தொழிற் கலை.
மலை விழுங்கி மாயாண்டி.
பொங்கல் நினைவுகள்
ஜீவகாருண்யம்.
சுட்டுரைப் போட்டிப் பரிசு

வருஷ சந்தா ரூ.3. | குடிசைக்கைத்தொழிற காங்கிரஸ் கலைமலர் வெளியீடு | தனிப்பிரதி 1 அணா.

சிறப்புரைகள்:—

தந்தி

1. இவ்வார நந்தி வெளியீடு வரப்பெற்றேம். உள்ளதை உள்ளவாறு தெளிவுடன் எடுத்துக் காட்டுவதில் நந்தி தலை சிறந்து விளங்குகிறது. கட்டுரைப் பொருட்கள் மனத்தைக் கொள்ளை கொள்ளுந் தகையனவாய் அமைந்துள்ளன. சைவப் பெருமையை ஒங்கி முழக்கும் சிவத்தொண்டு நந்தி போன்று தமிழர் பெருமையையும், அவர் முன்னேறி விளங்கும் வழி வகைகளையும், பசுமரத்தாணியாய் பதியச்செய்யும் பான்மை கண்டு மனமகிழ்ந்தோம் யாவரும் வாங்கிப் போற்றும் வண்ணம் விலையும் 1 அணாவே. தமிழ் மக்கள் அதனை ஆதரிப்பார்களாக.

ஆ-ர்
கலைமலர்,
பாளையங்கோட்டை.

தமிழ்ஜோதி

2. தமிழ் மணங்கமழுந்தமிழ் ஜோதி, தமிழ் நாட்டிற்கொரு தனி ஜோதி, தமிழ் மொழியின் இனிமையை ஜோதி வடிவமாய், இருநூலில் கொடுத்தை வாயிலாகவும், பொருளாதாரத்துறையின் பல முறைகளிலும் முனைந்து நின்று காட்சி கொடுக்கிறது. உண்மைச் செய்திகளை, நடு நிலைமையோடும் எவ்வெவராயினும் அவ்வவரது நிறை குறைப் பாராமுகமின்றி, கடைச்சுடர் பதில்தரும் தமிழ் ஜோதி என்றுமழியாப் பெருஞ் ஜோதியாய் விளங்குவதாக, இளம், எழுத்தாளரும், மூதறிஞர்களுமிதில் தலையிட் டெழுக்கண்டு மனமகிழ்வின்றோம். தமிழன்பர் இன்றே வாங்கிப் படித்து மன மகிழ் வீர்களாக. தனிப்பிரதி 1 அணாதான்

ஜெயவாணி

3. தமிழ்க்கலை வளர்ச்சிக்கு அரும்பாடுபடும் ஜெயவாணி, வரக்கண்டோம், கலை மகளின் வெற்றி முழக்கத்தை இதில் கண்டு மகிழ்ந்தோம் கட்டுரைகளிலும் கதைகளிலும் கலையறிவு பெருகும் வண்ணம் ஆணித்தரமான அழகுரைகள் அமைத்தப்பட்டுள்ளன. தமிழர் கலையறிவுபெறவும் ஜயவாணி ஒரு சிறந்தவழி காட்டியாவள் ஜெயவாணி கலை வாணியருள் கொண்டு என்றும் நிலைநீண்டு வாழத்தமிழர் அன்பை வேண்டுகிறோம்.

ஆ. ர்

வாழ்க்கை எது?

(தியாகபூபன்)

[முன்னுரை:— ஏழ்மைத் துயரில் வாடி வதங்கும் ஏழைகளே நகையாகும் பணமே! உன் வேலை எத்தகைத்து? உயர்ந்த நோக்கம் கொண்ட உண்மையை ஆள்வதே வாழ்வின் லட்சியம். உன் கண்களை மறைத்து நிற்கும் சுயநிலத்திரையை சற்று விலக்கினால், அறிவு என்ற ஒளியின் உதவிகொண்டு உலகைப் பார்ப்பாய்].

ஏழைகளே வாட்டி இரை எடுக்கும் சில புல்லுருவிகள் இருக்கின்றனர். இவர்களின் ஆணிவேர் கோடிக்கணக்கான் மக்களிடை சென்று அவர்களின் இரத்தத்தையே உறிஞ்சி விடுகின்றன. தன்னையொத்த மனிதர் வருத்த பெருங் கட்டுத் திட்டங்களுக் கிடையில் கிடந்தழல்கின்றனர். வேற்றுமை உருக்கொண்ட, நீதமற்ற இச்சட்டங்கள் வெறிகொண்ட. வேங்கைபோல் மானிட வாழ்க்கையிற் புகுந்து அதைத் தண்டித்து வருகின்றன.

ஏ! கொடிய மனிதக் கூட்டமே நீ என்று தான் மக்களுக்கு நீதி வழங்குவாயோ? வஞ்சகர், பொய்யர், சமூக்கர், ஈனர் நிறைந்த நீ, அறிந்துசெய்யும் பண்புமிக்க பெரியோரைக் குறைகூறுகின்றாய். பொய்யை மெய்யாக்கும் பேயர்களைப் போற்றுகின்றாய் உண்மையை வலியுறுத்தும் பான்மையாளனைத் தூற்றுகின்றாய். கடமையை மறந்த மடமையில் செல்வோரை செழிக்கச் செய்கின்றாய். கடமையைச் செய்வதே வாழ்வின் பயன் என்று எண்ணுகிறவர்களை ஒழிக்க முற்படுகின்றாய். ஏமாற்று பிறவர்களைக் கண்டு கொஞ்சுகிறாய். ஆனால் நான்.....! என் வாழ்நாட்களில் என் கடமையைச் செய்யத் தயங்கமாட்டேன்.

எங்கும் ஒரே இன்பம். எவ்விடத்தும் எல்லையில்லா உவகை; மூலை முடுக்குகளிலும் மென்மலர்களின் பரிபூர்ண ஆட்சி இறந்து செல்லும் இளக்தென்றலே அகமும் புறமும் அனைவரும் மகிழ்ந்து களித்தனர்— இல்லை—அனைவரும் என்று எப்படிக் கூறலாம்? கவலை இளர்ந்தெழும் கருவிழிகளுக்கு அவைகள் கோரமாகத் தென்படுகின்றனவே அவள் மனதிலும்கூட அவைகள் கிஞ்சித் தேனும் இடம்பெறவில்லையே. ஆம்; நூற்றுக்கு நூறு நிறம்தான். சோக ரஸம் ததும்பும் அவ்விருவினள் யார்? அவன் மடியில் கிடந்து புரளும் வஸ்து யாது?

மடியில் குழந்தையுடன் ஜெயமரி ஓர் மூலையில் உட்கார்ந்திருக்கிறாள். உளத்

தொழும் புயலை வெளியே படரவிடாமல் அடக்கமாக இருக்கலாம். ஆனால் அந்த இடத்தின் ஏழ்மையையோ, பட்டினிச் சின்னங்களையோ மறைப்பதெப்படி?

மாடத்திலிருந்த எண்ணெயில்லா விளக்கு புகைந்துகொண்டிருக்கிறது. அடுப்பில் எரியும் நெருப்பில் நிறைய மங்கல் வெளிச்சம் வீட்டில் பரவிக் கிடந்தது. அந்த அணைந்தின் சிந்தனைகள் எங்கெங்கேயோ அலைந்து கொண்டிருக்கிறது. யாண்டும் நிசப்தம் பொதுவில் ஏழை என்றும் பதத்திற்கு இதுதான் அர்த்தம் என்று காட்டிக்கொண்டிருக்கிறது, அந்த நிசப்தம்.

திடீரென்று குழந்தையின் மழலை அந்த நிசப்தத்தைக் கிழித்தது.

"அம்மா....."

"ஏன்....என்னடா கண்ணு!" இது தாயின் குரல்.

"ஏம்மா ஊடி இருட்டாயிருக்கு?..."

"விளக்கில் எண்ணெய் இல்லேயடா ராஜா"

ஒரு விநாடி மௌனம்; மறுபடியும் குழந்தையின் மழலை சரமாரியாக வாழிச் சுருட்டி வருகின்றன.

"எனக்குப் பயமா யிருக்கே..."

"நான்தான் பக்கத்திலே இருக்கிறேனே. தூங்கு கண்ணு. என்ன பயமா இல்லே"

"அம்மா குளிருதே..."

"இந்தா, இந்தத் தாவணியை மூடிக்கோன் தூங்கு".

"அம்மா எனக்குப் பசிக்குதே."

இந்தக் கேள்விக்குத் தாயிடமிருந்து பதில் இல்லை. ஜெயமரி தன் அருமைச் செல்வனின் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தாள். குழந்தைக்குப் பசியின் கொடுமையால் களைப்பு. அந்தச்சிறுவன் தாயை இறுக அணைத்துக்கொண்டு தன் விசாலமான நயனங்களின் பவள இதழ்களை மூடிக்கொண்டான். தாய் அன்புடன் ஏதோ பாடுகிறாள்.

"ஆராரோ ஆராரோ
ஆரிரரோ ஆரோரோ.....
தெள்ளமுத முண்டு தெவிட்டாக் கனியுண்டெம்
உள்ளங் குளிர உரையாடும் பைங்கிளியே
கண்ணுறங்கு கண்ணுறங்கு கண்மணியே கண்ணுறங்கு!
கானமயிலுறங்கு! கற்கண்டே நீ
உறங்கு!....."

தாயின் இன்னிசைச் சுருதியில் ஈண்டு மூழ்கிடும் தாலட்டில் நன்றாகச் சயனித்து விட்டான் சிறுவன்.

அந்த இருட்டில் ஓர் உருவம் ஓர் மனிதச் சிலை அது யார்? உலகப்பரதையில் உருண்

தமிழ்நாடு 143602

டேடும் மனிதக் கூட்டத்தைச் சேர்ந்தவனுய்த்தான் இருக்கவேண்டும்.

"ஜெயா! வீளக்கு எங்கே?

"இரண்டு நாளைக்கு முன்னே காலணுவுக்கு வாங்கிய எண்ணெய் இன்னுமா மீருக்கும்?"!

"குழந்தை ஜெகம் தூங்கிவிட்டானு?"

"ம் ம்....."

சோகத்தை உருவாகக் கொண்ட அவள் பெருமூச்சு அக்க எல்லியின் உச்சநிலையைப் பிடித்து உலுக்கியது. 'அவள் உள்ளத்தே அடங்கிக் கிடந்த சோரம் எப்போப்பட்டது என்பதை யாரால் அளவிட முடியும்?

வந்த மனிதனும் அங்கே அமர்ந்துகொண்டான். என்ன? இவன் ஏழையா? இரண்டு மாதங்களுக்கு முன் இவன் எப்படியிருந்தான்? அந்த அருளாளன்தானு இவன்? ஆம, அவனேதான். உலகம் உருண்டையே, அதில் கடைபெறும் செயல்களோ நிமிடம்தோறும் மாறுபடுகின்றன. கேவலம், பணத்திற்கு அடிமையாகவுள்ள உலகம் அவனிடம் இரக்கம் செலுத்துமா? வேலையின்மை எதும் அதிர்ஷ்டமும் சேர்ந்து கொண்டபின் அவனுல் என்ன செய்யமுடியும்? அக்கத்தில் தத்தளிக்கும் இருதயங்கள் இரண்டும் கொந்தளிக்கும் சோக ஆனந்தம் எப்படி வரும்?

அருளாளன் அன்று [illegible] ஏழ்மையா? ஆம் ஏழ்மையாகத்தான் குடியிற்பிறந்தவன் தான். எல்லோரையும் போலவே பள்ளியில் படித்துத் தினே தினே வளர்ந்து வந்தான். கல்வியும் அவனுடன் வளர்ந்தது. அவனது அங்க அமைப்பும், தேகக்கட்டும், 'வாலிபன்' என்பதை உணர்த்தும் நாளில் உயர்தரப் படிப்பையும் முடித்து வைத்தான். தந்தையும் தாயும் தன் கண்ணுள்ள போதே தனயனுக்கு நல்ல பெண் பார்த்து 'பிச்சை தாலி' கட்டி வைத்து கண் குளிரப்பார்க்க ஆசைப்பட்டனர். பெற்றோர் இவ்விதம் எண்ணுவது சகஜம் தானே

ஜெயமணியும் அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக வந்து வாய்த்தாள். இருவரும் ஒருமித்து இல்லறச் சகடதைத இனிதாய் ஓட்டி, தண்ணலம் கருதாத் தலைமைச் சார்ந்து நல்லறம் செய்து வந்தனர். உள்ளமோ தூய இலவம் பஞ்சுதான். கதைகளில் கொப்பளித்துக் கிளம்பும் அன்பையும் பிரேமையையும் அவர்கள் விலைக்கு வாங்கவில்லை. ஈருடலும் ஓருயிரும் என்று சொல்வார்களே அப்படி. 'ஜில்கா வியாஸ்' உண்டியல் கடையில் கணக்குப் பிள்ளை வேலை கிடைத்தது. கள்ளங் கபடமற்ற அருளாளன் தெள்ளத் தெளிய வாழ்க்கை நடத்தி வந்தான்.

ஆனுல் அவன் ஏழையா? இந்தப் பட்டம் எவ்வளவு காலமாக, எப்படி வந்தது. அது தான் பழங்கதை!

பூவலூர் மாணிக்கஞ் செட்டியாரைத் தெரியாத பேர் வழியே அந்த வட்டாரத்தில் இடையாது என்றே சொல்லிவிடலாம். வட்டி மேல் வட்டி பொங்கும் அந்த 'ஜில்கா விலாஸ்' அரைத உண்மையில் நிலையம். அந்தச் செட்டியாரையும் கொஞ்சம் அறிமுகப் படுத்தி வைக்கிறேன்.

உருண்டு திரண்ட முகம், அகன்ற நெற்றி, அதன் மேலே அழகாகப் பூசப்பட்ட பூனை சந்தனமிட்ட அழகிய சுத்தனப் பொட்டு, அருமையான புருவங்கள். கடல் போன்ற கண்கள். காதை மினுக்குகின்ற வைரக்கடுக்கன். ஆனால் அவர் அகம் என்னமோ பணப்பேய்ப் பிடித்தாட்டும் பாழ்வ இணமதான்.

ஏழ்மை உலகம் அவர்க்கு ஓர் வினையாட்டுப் பொம்மை. ஏழைகளின் மானிசத்தைப் புசித்து அவர்களின் இரத்தத்தைப்பானம் பண்ணுவதில் ஓர் தனி ஆசை கொண்டவர்.

மூட்டுக் சுட்டையில் முட்டிக்கொண்ட வர்கள் எல்லோரும் அவரிடம் மாட்டிக் கொள்வர். விற்பனைக்கு வரும் ஆபரணங் கள், நகைகளைக் கண்டதும் அவரது கடை வாய் கொஞ்சம் அகலமாகும். அந்த நகைகளை கல்லில் உரைக்கும் தோறும் ப்ரித்தங்கம் தேய்ந்து விடும். மீதிக்குத் தான் ஏதோ பணம் கொடுத்தனுப்புவார்.

எல்லாக் கணக்குகளும், பத்திரங்களும், அருளாளன் கையாலேதான் எழுதப்பட வேண்டும். அருளாளனையும் மாணிக்கஞ் செட்டியார் மிகவும் அன்புடன் தான் நடத்தி வந்தார்,

அன்றொரு நாள் மாணிக்கஞ் செட்டியார் தம் மைதனருடன் அளவளாவி வானகங் கூட்டி வாலைப்புகழ்வது போல் தனக்குலப் பெருமை இனிதே இசைத்து உரையாடிக்கொண்டிருந்தார். அந்த [illegible] யம பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்தான். அவனை அந்தச் செட்டியார் கவனித்தாரா? அது கிடக்கட்டும் அற்பத்தூசி. இவ்வளவு பெரிய உருண்டை உலகில் அவன் எந்த மூலையில் இருந்தால் தான் என்ன?

ஆனால் அருளாளன், அந்தப் பிச்சைக் காரனைக் கண்டதும் சும்மா இருந்து விட வில்லை. எரிந்து விழவும் இல்லை. காண்கு அணாவை எடுத்து பிச்சைக்காரன் கையில் கொடுத்தான். பிச்சைக்காரன் பார்வை யில் நன்றியறிதல் நிரம்பி இருந்தது. பக் கத்துக் கடையில் பாடும் பிச்சைக்காரனை பாட்டும் காட்டில் மிதந்து வந்து அருளா ளன் காதில் மோதியது. அப்போது ஐந்து மணி இருக்கும். வேலையை முடித்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றான். மனவி கொடுத்த காபியை அருந்தி விட்டு சாளரத் தின் பக்கத்தில் கிடந்த நாற்காலியில் பத்தி ரிகையுடன் அமர்ந்திருந்தான்.

ஜன்னலின் வழியாகப் பார்வையைச் செலுத்தினான். மெல்ல மெல்ல தலைநீட்டி

ஆடிக்கொண்டிருக்கும் அந்த சோளா மலர் அவன் கருத்தைக் கவர்ந்தது.

அழகிய பூ; அதில் ஒரு தேனீ. தேனீ மலரிலுள்ள தேனைப் பருகி விட்டுப் பறந்து செல்லவே ஆச்சரியம் அதிகமாகி விட்டது அவனுக்கு. பூ எந்த வர்ணத்துடன், வாசனையுடன், உருவத்துடன் இருந்ததோ அப்படியேதான் இருந்தது. இந்தக் காட்சியின் மாட்சி அவன் மனதின் ஆழத்தில் தைத்தது.

"தேனீ புஷ்பத்திற்கோ அதன் வாசனைக்கோ, வர்ணத்திற்கோ ஒருவித ஹானியும் விளைவிக்காமல் தேனைப் பருகி விட்டுப் பறந்து சென்றது" என்பதை உணர்ந்தான் — ஏன் — அவன் கண்ணாலே கண்டான். அதைத் தன்னுடைய வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தான்.

வட்டிக்குக் கடன் கொடுத்து ஏழைகளைப் பாழாக்கும் பணக்காரனுக்குத் தான் உதவுவதும் அவ்வுதவிக் கேற்ற கூலி பெற்று வாழ்ந்து வருவதும் அவன் மனதிற்கு நிம்மதியளிக்கவில்லை. குற்றமற்ற தேனீக்களைக் கொன்று நற்றேனைப் பிழிந்து கொடுத்து புறங்கையை நாவில் போட்டு இன்புற அவன் விரும்பவில்லை. அந்த எண்ணத்தை டனேயே படுக்கையில் சாய்ந்தான். அவன் மனம் தத்தளித்து, கூத்தாடியது; அவனைப் பார்த்தே அவன் மனம் என்னை நகையாடியது.

"இந்த வேலை உனக்குப் பிடித்தமில்லையா?"

"பகுத்தறிவையும் மனச் சாட்சியையும் பறிகொடுக்க எனக்கு இஷ்டமில்லை"

"மூடா! இந்த வேலை போய்விட்டால் எந்த வேலைக்குத்தான் நீ லாயக்கு?"

"அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை"

"ஆனால் நீ எப்படி வாழ்வாய்? உனது அருமை மகனையும்; மனைவியையும் எப்படிக் காப்பாற்றுவாய் உன் வாழ்க்கை இன்றோடு பாழ்"

"ஆண்டவன் ஒருவன் — கருணைக்கடல் — அருளின் பெருக்கு — அன்பின் வெள்ளம் — சௌந்தர்யத்தின் இருப்பிடம் — இன்பவுற்று — இருப்பது உண்மை அவர் விட்ட வழி ....."

"எந்த தொழில் செய்து வயிறு வளர்க்கப் போகிறாய்?"

"ஏன்? எனது நிலத்தை நான் உழுது பயிரிட்டால் என்ன?"

"பூஹ்!.....மண்வெட்டி பிடித்து உழைக்கவா? என்ன. கலாசாலைக் கல்வி பயின்றவா?"

"உழைக்கும் தொழிலில் உயர்வு தாழ்வு ஏது? பிறர்க்குத் தீங்கு இழைக்காத எந்தத் தொழிலும் உத்தமத் தொழில். மாசு படிந்த மதிப்பை மிதித்துத் தள்ளிவிட்டு முன்னேற்ற வாழ்வின் முன்னணியில் செல்லத் தயக்கம் கொள்ளேன்"

"சரிதான்; பின்னல் வரப்போகும் பட்டினிப் பகையை நீ அறியமாட்டாய்?"

"மனமே! உன்னைச் சுற்றியுள்ள அகங்கார உலகின் மாயவஞ்சக வலையில் வீழாதே. உண்மை விளக்கைத் தேடி ஏற்றுவிப்பதுதான் வாழ்க்கையின் உயரிய லட்சியம் படையஞ்சாதே! பலம் அஞ்சாதே!! பகையஞ்சாதே!!! உயிருக்கே ஆபத்து வரினும் வேலியுறாதே. தியாகத்தீரிகொண்டு பிரகாசிக்கும் உன் விளக்கு அதைச் சுற்றியுள்ள அநேகருக்கு வழிகாட்டியாக நிற்கும்."

இந்த மனப் போராட்டத்திலேயே இரவு ஒருவாறு ஒழிந்தது. சுகந்த சீதள சரீரம் வெண்சாமரம் வீச, புள்ளினங்கள் வரவேற்புக் கீதமிசைக்க ஆதித்தன் மக்களுக்கு ஆறுதல் கொடுக்க மேற்திசையில் இழுப்பினான். அருளாளன் இளம்பினன் உண்டியல் நிலையத்திற்கு! மாலை மணி ஐந்து ஆயிற்று.

பேனு இறைகையில் பிடித்தான். சில நிமிடங்கள் ஒன்றின்பின் ஒன்றாய்க் கடந்தன, தனது ராஜிநாமா கடிதத்தை நீட்டினான்

"என்ன! எதற்காக ராஜிநாமா" என்று கேட்டார் மாணிக்கம்

"பகுத்தறிவையும், மனச்சாட்சியையும் பறிகொடுக்க எனக்கு இஷ்டமில்லை" என்றான் அருளாளன் இதற்குமேல் சம்பாஷணை நீடிக்கவில்லை. கையில் தன் சம்பள பாக்கி ஏழு ரூபாயையும் வாங்கிக்கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

பள்ளிச் சிறுவர்கள் கட்டகன்ற கன்று போல் களிப்புடன் இல்லம் ஏகினர். பெருமதியும் பேரெழிலும கொண்ட பெண்கள் தங்கள் நாயகனின் வரவை நோக்கி தலைவாசலில் கண்ணை நிற்பதும், பின் உள்ளே செல்வதுமாக இருந்தனர். ஜெயமணியும் நாயகன் வரவை எதிர்நோக்கி நின்றாள். குளிர் தென்றல் பவள இதழ்களில் உரசிந்து கொஞ்சலையும் அரைத்து வீசியாடிக்கொண்டிருந்தது. நாதனைக் கண்ட ஜெயாவும் இன்பமுடன் வரவேற்றாள். நடந்த விஷயத்தை நிதானமாகச் சொல்லி முடித்தான் அருளாளன். அவன் முகத்தில் ஓர் மகிழ்ச்சி என். அவன் நியாயம் செய்தான் தனது வேலையை ஏழைகளுக்காக — ஆம் அவன் தியாகத்தின் அரசன்.

இதற்குப்பின் நடந்த வாழ்க்கையைப்பற்றி யோசிப்பு முதலில் வரைந்துள்ளது. அந்த விவசாயத் தொழிலும் அவன் சலிப்படைய வில்லை. ஆனால் அருளாளன் இப்போது விவசாயிதானே! அல்ல — அல்ல அவனுக்குக் கிடைக்கலாட்டரி பிரைஸ் ரூ. 20,000 த்தைக்கொண்டே அழகான கைத்தொழில் நிலையம் ஏற்படுத்தினான் என்னே கடவுள் கருணை! தன்னை நம்பிய ஆத்மாவுக்கு இறைவன் செய்யும் உதவியே அளிப்பட்டதுதான்!

சுபம்

நச்சுமரம்: இச்சை உரம் பிச்சுக்கரம்— உச்சும் சரம்

(A. P. SASTRI)

ஆதியில் ஒரு நச்சுமரத்தைப் பற்றி அறியாதார் யாருளர்? அம்மரம் அக்கினி அருந்திய இருவருடைய ஆருயிரை அவ்வேளாரோடே அறுத்துவிட்டதன்றே! இப்போதும் ஓர் நச்சுமரத்தைப்பற்றி நினைப்போம், துய்ப்போம், படிப்போம், முடிப்போம். பண்டைய மரத்தின்பாடு ஓர் ஆழ்ந்த கருத்தப்பற்றியதன்றே! இம்மரத்தின்பாடு ஒருவாறு அப்படியேயென்று வாசிப்போருக்குப் புரியும்.

மூலையாகி மராமரமாக வளர்ந்து பூத்தக்கனி தொங்கும் இந்நச்சுத்தரு ஒவ்வொருவர் அகச்சோலையிலுமுண்டு. கோபம், லோபம் மோகம் முதலிய தீய குணங்கள் தின்டாத மனிதப்பிறவியேயில்லை. ஞானிகள் கூட இவற்றிற்கு அடிபணிந்திருக்கிறார்கள். தம் தமது திடச்சித்தத்தினால் இவற்றை அடக்கி வென்றவர் மிகச்சிலரே. பெரும்பாலோர் இப்பீடத்தண்டை பலியாயிருக்கிறார்கள். இம்மரம் தோன்றி வளருகின்றது. இதை நசுக்கமுடியாத தன்மையே இதன் மூலியாம். ஒருதரம் இது குருத்து விட்டால் அப்புறம் ஒங்கி வளரவேண்டியதுதான். இத்தரு சீக்கிரம் விருத்தியடைகிறது. வேர் ஊன்றி விட்டால் பேராது பிரியாது திரியாது தெரியாது இது. இதன் காட்சி கண் ஊனக்கவருப்படியுள்ளது. மனிசைக் காந்தம்போல் தமிழுக்குமட்டும் தூரத்தேயிலிருந்து கொண்டே இதன் இலையும் கனியும் நம்மை மயக்கி அழைக்கும் இழுக்கும். ஆகவே இதன் இழும்பில் வழுக்கி விழுந்து இதன் மாசுக்கனியை ஆசிப்போர் நாசமாவது திண்ணம்.

இப்பேதத்தினால் நச்சுமரப்பழம் பற்பல சுவையுடையதாகுக்கலாம். இதை விரும்பி அருந்துவோர் பின்னர் சோகங்களுக்கும் மோகங்களுக்கும் ஆளாகி, மருந்தின்றி மாள்வது கண்கூடி. இவ்வுலகில் மற்றைய நெடுவாழ்நாளிடை இப்படித் தீனியினால் வருந்தோடுகளே எராளம். இயற்கையிலேயே மனிதனுக்கு நல்ல நல்ல ஆற்றலுண்டு. அதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டிய ஊக்கமோ அல்லது முயற்சியோ கல்வியினால் அமையவேண்டும். இது பற்றியன்றே பின்வரும் கூற்றுகள் தோன்றின

(a) கற்கக் கசடறக் கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத்தக

(b) படிக்கப் பாமுறப் படிப்பவை படித்தபின் நடக்க அதற்குத்தக

ஆதலின் இப்பயிற்சியே இவ்வாலசிலத்தைக் கல்லும் கல்வி மூலமாய்த் திகழ வேண்டியது. கணக்காயரிடம் பெற்றுள்ள அறிவு அப்பயிற்சியென வெண்ணலாகாது. அது வெறும் ஏட்டுச் சுரைக்காயேயாகும். அந்தக்காரணம் அந்தமக்க சுயமுயற்சியாலாகும். ஞானவளர்ச்சி இதன் கண் ஊடுபடவேண்டும். இதுவே கல்விப் பயிற்சியின்சாரம்.

நமது கதாநாயகனுடைய ஞானதிகத்துக்கு இச்சாரமுண்டோ? தகப்பன் கொடுத்துள்ள ஞானதிக்கமென்ற காரமே அவனுக்குண்டு. இவன் இன்றர்மீடியேம் ஒப்பேறினவன், இவனுடைய அண்ணன் ஞானக் கண் பி. எ-க்குத் தான் இது உண்டா? அல்லது இவர்களின் மூன்றோன்றலாகிய ஞானமணி எம். எ-க்குத்தான இது உண்டா? இவர்களெல்லாம் வெறும் ஏட்டுப் படிப்புடையவர்கள் மட்டுந்தான். மேட்டுப் பிடிப்பு மற்றியிருக்கும் வீட்டு ஞானத்தின் அணுவேனும் கண்டறியார்கள். கோலே, களவு, கண், காமம், கோபம் என்ற பஞ்சமாபாதகம் ஒன்றே, இரண்டோ, முதலிய வற்றின் நிழலில் தங்கியிருப்பவர்கள் கற்பகப் பஞ்சதருக்கள் உண்டென்பர் நூலோர். அப்ப ஆயுள் பஞ்சதருக்களென்றால் இப் பஞ்சமா பாதகங்களல்லோ.

ஞானதிக்கத்துக்கு மேற்கூறிய பயிற்சி ஏற்பட்டிருந்தும் அவனைச் சகல சுகபோகங்களுக்கும் ஆளாகச்செய்து அவனை அனுப்பியிருக்கின்றார் போதும் உலகியற்றியான். மன்மதமேனி, நகைக்காதி, பிணியற்ற பாண்டம், படிப்புப்பாண்டித்தியம், கற்புடைய காதலி, இவ்வளவு சௌபாக்கியங்களும் அவனுக்கு ஏற்பட்டிருக்கின்றனஃ சாதாரணமாக ஒருவனிடத்தில் இவ்வளவும் காண்பதரிது. முக்கியமாக ஞானகிக் கத்தின் நடத்தையே அவனை இதுவரையில் சுகத்தில் வைத்திருக்கின்றது. அவன் இன்முகமாக இருப்பவன். அனுதை ஆதரவின்ன மிதமாக வழங்குபவன், கெஞ்சக் கிருபையுடையவன். உற்றதை உரைத்தியுடன் முடிப்பவன் தாய் தந்தையரிடத்தவ உள்ளவன். மனிஷியை மின்னும் பொன்னினுல் நன்னயப்படுத்துவோன். லோசனையில் அருந்திறமுடையோன். நாவில் நயமுடையவன். பூமியத்தைப் பெரிதுங் காப்பாற்றும் புகழுடையோன் இவ்வித உன்னத குணங்களுடையவன் ஞானசௌந்தரியின் வழுவாத நழுவாத தூய்மையான காதலும் பெற்றிருக்கின்றான். இவனுக்கு நித்திய சுகமே பரிசாக ஏற்படவேண்டியது. ஆனால் கடைசியில் குறிப்பிட்ட நச்சுத்தருவைக் கண்டு மயங்கிப்போய்விட்டான். காதலே குலத்தினையும் கலத்தினையுங்கெடுக்கவந்தகளங்கம்: காதலே தரித்திரங்களனைத்தினையும் புகட்டி வைக்குங் கடாரம். காதலே பரகதிக்குச் செல்லாமல் வழி மறிக்கும் பாடம். காதலே அனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியுங் கத்திதானே! என்றார் அறிஞர். இனி இவ்வு சொல்லக்கிடக்கதையாது? மேற்கூறிய நிலையுற்ற ஞானதிக்

கம் காதற்காடிப்பானையில் விழுத்துதவிக்கலா னன். சோனையிற் சிக்கி வேதனைபடை கையில் மனந்திரும்பி பின்வருமாறு பிதற்ற லானன். "எனக்கு இந்தவாழ்க்கை பிடிக்க வில்லை. நான் ஓடிப்போய் வீடலாமென் றால் முடியவில்லை. வீடு, வாசல், பெண் டாட்டி, பிள்ளை நஞ்சை புஞ்சை எதவும் எனக்கு வேண்டிய எதிலும் எனக்குச்சுக மில்லை. நான் அயோக்கியன். கற்புடைய காரிமையோரி காலங்கழித்துக் கொண்டு தெறிதவறி நடப்பது நரபசிக்கு தேர் வீரர் தமன்றே! என்னுடைய மாசற்ற மனைய ளின் வாழ்க்கையை மலினப்படுத்த மன மில்லை. அவள் அந்த வீட்டிலேயேயிருந்து தனவன் கடந்து போனான் என்று கருதிக் கொள்ளட்டும். என் மேல் ஒருவரும் கினந்துகொள்ளவேண்டாம். என் அந்தக் கரணம் எனது ஆதீனத்திலில்லை. நான் தது வேண்டுமானலும் விட்டு விடுகிறேன். அம்பாதர் மேல் மூண்ட மோகத்தைவிட முடியவில்லையே! நான் அன்று அவளை அவ் வீட்டிற் கண்டது முதல் அவளுடைய அழ காகிய வலையில் அகப்பட்டுக்கொண்டேன். நேயாளியைக் காய்ச்சல் எப்படி வாட்டு மோ அது போல என்னை அவளுடைய அழ குப்பித்தாகிய காய்ச்சல் ஆட்டுகிறது. அவளுக்காக நான் செய்த சூட்சிகளுக்குக் கணக்கில்லை. நான் கொடாகிக்கோலம் பூண்டிருக்கிறேன். இராப்பாடிப் பாவனை யில் அவளுள்ள இடத்தேடி அபிநயம் பணி ணியிருக்கிறேன். பிச்சைக்காரன் போல் நடித்து 'அம்மணி' பிச்சையென்று வாயிற் கதவண்டை நின்று ஆரற்றியிருக்கின்றேன். பொதுபாடு போற் சுமையுந் தலையுமாய்ச் சென்று அவள் வீட்டையணுகி 'கத்திரிக் காய் வேண்டுமோ, கீரை வேண்டுமோ, மலைப்பழம் வேண்டுமோ, நிலக்கடலை வேண் டுமோ' வென்று கத்தியிருக்கிறேன். இதெல்லாம் கற்பித்துப் பிடித்த சித்தப்பிர மைபிலனன்றே! ஈற்றில் ஓயாமல் கமல மலர்க்குழல்—உன்றன் அமலமலர்க் குழல்', என்று உளறிக்கொண்டிருந்தான்.

தொடர் நாவல் :—

கமலா—விமலாவின் கடவுள் பக்தி.

கமலா:—அடியே நீ எங்கு தரிசனம்மாய் செல்லுகின்றாய்

விமலா:—நான் என்னுடைய வயிலே எப்பொழுது அறுவடை செய்யலாம் என்று பார்க்கப் போகிறேன்.

கமலா:—நானும் உன்னுடன் என் வயிலையும் பார்க்க வருகின்றேன்.

(இருவரும் செல்லுகிறார்கள்)

விமலா:—நாம் தினமும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோமே எப்பொழுது தான் பண்டரிநாதனின் தரிசனம் காண்பது.

கமலா:— என்னடி பிரமாதமான காரியம். நபர் ஒன்றுக்கு ரூ. நூறு எடுத்துக்கொண்டு போனால் போகிறது உடன் பண்டரிபுரம் போய்த் திரும்பி விடலாம்.

விமலா:—என்னடி திடீரென்று நூற்றுக் கணக்கில் சொல்லிவிட்டாய். உனக்கும் எனக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது. நீ ஓர் பணக்காரி நானோ எளியவள்.

கமலா:—கடவுளின் தரிசனம் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் உண்டானால் எப்படியும் அந்த பண்டரிநாதன் கிருபை செய்வார் என்று தைரியமாக சொன்னாள்.

விமலா:— ஏண்டி நீ சொல்லுவாய். வாஸ்தவத்தில் உள் அந்தரங்க பக்தியுடன் பண்டரிநாதனை தினமும் தவறாமல் தொழுதால் தரிசனம் நாம் இருக்குமிடத்திற்கு கிடைக்கும்.

கமலா:— வீணாய் உளரிக்கொட்டாதே. கடவுளாவது நாம் இருக்குமிடத்தில் தரிசனம் கொடுப்பதாவது உனக்குப் பித்தம் பைத்தியம் ஜாஸ்தியாய் விட்டதுபோல் காண்கிறதே.

விமலா:— அடியே பணப்பித்து பிடித்தயார் அலைகிறார்கள். இனி சிறிது நாளில் எம்பெருமானது தரிசனம் கிடைக்கிறதா? இல்லையா? என்று நீயும் நானும் பார்க்கலாமே?

கமலா:— வீணை வார்த்தைகள் எதற்கு? தரிசனம் வேண்டுமென்றால் நாம் உடன் புறப்படவேண்டும்.

விமலா:— சரி இனி இரண்டொரளில் புறப்படலாம். (நாள் கழிந்தது விமலா தூண்டினாள்.)

கமலா:—அடியே எல்லாம் சரி ஒன்று மறந்து விட்டோமே. கர்ம கால் ரகடையாய் புறப்பட்டு பண்டரிபுரம் போகிறதாயிருந்தால் எப்படியும் மூன்று மாதங்கள் ஆகும். அறுவடைக்கு நாள் நெருங்கி விட்டது. அறுவடைக்குப் பின் போகலாம்.

விமலா:—சரி. அப்படியானால் ஜூலையில் சுரியாதிகளை முடித்து விட்டுப் புறப்படுவோம். (அறுவடை முடிந்தது கமலாவைத் தூண்டுகிறாள்).

கமலா:—அடியே பொறு பின்னால் செய்யக்கூடியதை மறந்து விட்டோமே.

விமலா:—என்னடி மறதி—மறதி மறதி என்று காளைப் போக்கிக்கொண்டிருக்கிறாய். இப்படி மறதி உள்ள உனக்கு எப்படித் தரிசனம் கிடைக்கும் என்பது எனக்குச் சந்தேகம் அந்த மறதியைத் தான் சொல்லேன்.

(B. G. Gopalakrishna Raju)

தொடரும்.

* கல்வி. *

A. P. Nadar.

உலகத்தில் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவராசிகளில் மனிதன் ஒருவனே ஆற்றிவுப் பிராணி. மெய்யறிவைக் கொடுக்கக்கூடிய அந்த உட்கருவியே மனிதனை ஆறறிவுப பிராணியாக்கியிருக்கின்றது. இதுபற்றியே நாயனார் பின் வருமாறு கூறினார்.

ஐயறி வேய்தியக் கண்ணும் பயனின்று
மெய்யறி வில்லாதவர்க்கு.

மெய்யறிவுக்கு அடிப்படையாயிருக்கின்றது கல்வியே யன்றோ! இக்கல்வியே மனிதனை ஏனைய உயிர்ப்பிராணிகளிலிருந்து மிகவும் பிரத்தியேகப்படுத்திக் காட்டும் தரத்தது. இக்கல்வி மனிதனுக்குத் தனிச் சுதந்திரமாயுள்ளது. மற்றெந்த அலங்காரங்களையும் ஏனைய பிராணிகள் அடைந்துவிடும்படி செய்துவிடலாம். உதாரணமாக அமெரிக்காவிலுள்ள ஒரு மகா பண்டிதன் 'உராங் உடாங்' என்ற குரங்கு ஒன்றைத் தன்னைப்போல் உடை போட்டு அலங்கரித்து அதன் கையில் ஒரு தடியும் கொடுத்து உலாவக் கூட்

டிக்கொண்டு போனபோது கண்ணுற்றோர் அதனையும் ஓர் மனிதப் பிராணியென்றே நினைக்கலாயினர். ஆனால அண்டையில் வந்தவர்கள் அதன் ரகசியத்தை அறிந்துகொண்டனர் என்றால் மிகையாகாது அது வாய் திறக்க முடியாமல் தத்தளித்தது. இவ்வளவு வெளியலங்காரம் செய்து அதனைப் பக்குவப்படுத்திக்கொண்ட மனிதனுக்கு உள் அலங்காரத்தை அளிக்கக் கூடுமானால அதைச் செய்திருப்பானே யன்றோ! அவ்வாறு செய்ய முடியவே முடியாது.

டார்வின் (Darwin) சாஸ்திரி, மனிதனைக் குரங்கிலிருந்து தோன்றினவனென்று வாய் ஓர்ப்பாட்டம் செய்த போதிலும் கல்வி அறிவை அடைய முடியாத அக்குரங்கு மனிதக் குலத்தைச் சேர்ந்த நபர் என்று பேர் எடுத்தென்ன, எடுக்காமல் போயென்ன! இத்தனை சகஸ்ர வருஷங்களாக இப்பண்பு அடைய இயலாத குரங்கு ஜாதியை, கல்விக்களஞ்சியத்தை அடைந்திருக்கும் மனிதனின் முன்னோர் என்று கோஷிப்பதனால் என்ன லாக்கியம்!

எதார்த்தமான மனிதவர்க்கத்திலுள்ளோரும்கூட கல்விப் பொருளை யடைந்தும் அதனை அவர்கள் உள்ளபடி அடையவில்லையென்ற தன்மையில் பெரும்பான்மையோர் இருப்பது வெளிப்படை. கல்வி என்ற விஷயம் ஒருவகையில் மனிதனுக்குப் பானது. எவ்வாறெனில் மனிதனுக்கு உள்ளே ஆத்துமாவும் ஜடமும் இருக்கிறது போல, கல்விக்கும் ஆத்துமாவும் ஜடமும் உண்டு. மனிதனுடைய வெளி ஜடத்தில் பல், முடி, நகம் முதலியவை தோன்றுவதுபோல, கல்வியின் வெளிச் சடபாகத்தில் பல், முடி, நகம் தோன்றுவதைப் பார்க்கலாம். மனிதனில் உட்பாகத்தில் மனம், புத்தி, சித்தம் என்கிற முக்கிய அந்தக்கரணங்கள் அமைந்திருப்பது போல, கல்வியின் உட்பாகத்தில் இத்தகைய பண்புகள் அமைந்திருப்பதைப் பார்க்கலாம். மனிதனுடைய சடலத்தில் தோன்றுகிற பல், ரோமம், நகம் போன்ற காரியங்கள் தான் கல்வியின் சடலத்தில் தோன்றுகிற பூமி சாஸ்திரமாகிய பல், சரித்திரமாகிய ரோமம், தாவர சாஸ்திரமாகிய நகம் போன்ற காரியங்கள், மனிதனுடைய உள்ளில் அமைந்திருக்கிற மனம், புத்தி, சித்தம் என்கிற அந்தக்கரணங்கள் கல்வியின் விஷயத்தில் எவையென்றால், அவைகள் மிகவும் ஆழ்ந்து, ஆராய்ந்த கண்டுபிடிக்கக் கூடிய பண்புகளேயாகும்

இப்பொழுது ஆராய்ச்சியின் பேரில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள அப்பண்புகள் ஏழு அல்லது சப்த இலக்ஷணங்கள். சப்த என்ற பதம் மிகவும் விசித்

திரமான அர்த்த புஷ்டியுள்ளவை அதாவது சப்த சுரம், சப்த வர்ணம், சப்தமண்டலம், சப்த சமுத்திரம், சப்த ரிஷிசப்ததினம், சப்த பெண்பால் பருவம், என்றவாறு கல்வியின் உள்ளான சப்த இலக்ஷணங்கள் எவையென்றால் க, ச, த, ந, ப, ம, வ என்ற எழுத்துக்களால் ஆரம்பிக்கப்பட்ட ஏழு பதங்களுக்குரிய பொருள்களே யாகும். அவை பின் வருமாறு:—

1. க — கற்பு
2. ச — சத்தியம்
3. த — தர்மம்
4. ந — நம்பிக்கை
5. ப — பயமின்மை
6. ம — மன்னிப்பு
7. வ — வரம்

இவ்வெழுத்துக்கள் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களாகின்றமையால், இக்குணங்களும் முதன்மை பெற்றன வென்றால் மிகையாமோ!

மலை விழுங்கி மாயாண்டி.

(தொடர்ச்சி)

(வித்துவான் வே. மு. கந்தசாமிப்புலவர்)

அன்பர்களே நமது மாயாண்டி முதல் இதழில் இடையக்கோட்டை ஜமீன்தாரிடம் மலை விழுங்குவதாகக்கூறி ஏமாற்றித் தான் விரும்பியவாறு, பொன்னும் பொருளும் பெற்று மாடிக்குமேல் மாடி வைத்த வீடுகள் கட்டி அதில் தன் மனையாளோடு சுகித்திருக்கும் காலில் அவனை ஏமாற்றுவதற்காக தஞ்சையிலிருந்து இரண்டு பேர் வழிகள் வந்தார்கள் என்பதனை அறிந்தோம். அதன் பின்னர் நிகழ்ந்தவாறு இவ்விதழால் அறிவோம்.

மாயாண்டி அவர்கள் வரலை எவ்வளவாலோ அறிந்துகொண்டான். அறிந்து கொண்ட அவன் எவ்வகையானும் அவர்களை ஏமாற்ற வழிதேடினான். மனதில் ஒரு வழி தோன்றியது. தன் வீட்டில் தான் வளர்த்த முயல்கள் இரண்டில் ஒன்றைக் கையில் எடுத்தான். தன் மனைவியை அழைத்து "கண்ணே என் காதற் கழஞ்சியமே, தஞ்சையிலிருந்து இருவர் என்னை ஏமாற்றி பொருள் பறிக்க வருகின்றனர். அவர்களை நாம் ஏமாற்றி விடவேண்டும். அதற்காக இந்த முயலை கையில் எடுத்துக் கொண்டு பறப்படுகிறேன். நீ பச்சரிசிச் சோறும், பறப்புக்கொழம்பும் கொத்த மல்லி தொகையலும் மிகவும் பக்குவமாய்ச் சமைத்து வைத்து சமயம் போல் சாமர்த்தி

யமாய் நடந்துகொள்ளவேண்டும்'' என்று கூறிப்புறப்பட்டு ஒரு சாலை வழிச்சென்றான். அப்பொழுது மேலேக் கூறப்பட்ட தஞ்சை பேர் வழிகள் இருவரும் இவனிடமே வந்து ''ஐயா மலைமுங்கி மாயாண்டி என்பவர் இருப்பது எவ்விடம்? அவரைஇப் பொழுது காண இயலுமோ? எனக்கேட்டனர்'' அப்பொழுது நமது மாயாண்டி ''அப்பெயர் கொண்டவன் யானே'' என்றனன் அது கேட்ட அவ்விருவரும் மிகவும் மகிழ்ந்து ''ஐயா கும்பிடப் போன தெய்வத்தை சுமக்கே கண்டார்ப் போல் தங்களை இவ்விடத்திலேயே கண்டு கொண்டோமே. மிகவும் நல்ல காரியமாயிற்று?, என்று கூறி இருதரத்தாரும் க்ஷேம லாபங்களை வினவிக்கொண்டனர் அப்பொழுது மாயாண்டி ''அடடா தாங்கள் வெகு தூரத்திலிருந்து வருவதால் பசியால் களைத்திருக்கிறீர்கள்'' இதற்கு என்ன செய்யலாமென்று யோசனை செய்பவன்போல் யோசித்து, மூயலை கீழேவிட்டு ''அடமுயலே நீவீட்டில் உன் அம்மையிடம் போய் பச்சரிசி சோறும் பறுப்புக்குழம்பும் கொத்தமல்லி தொகையிலும் சித்தமாய் வைக்கும்படி சொல் என்று கூறி அதன் முதுகில் இரண்டு தட்டுத் தட்டி விரட்டி விட்டான். அம்முயல் சிறையினின்று விடுதலை பெற்றூர் போல் சென்றது. அதனைக் கண்ட அவ்விருமார்க்கரும் அதிசயப்பட்டுக்கொண்டனர். பின்னர் அவ்விருவரையும் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்றான் மாயாண்டி. சென்றதும் தன்மனையாளை அழைத்து முயல் வந்ததா என்று வினவினன். அவளும் ஆடி எடுத்த கள்ளனுக்கு ஆக்கியிட்ட கள்ளி ஆதலால் உடனே முயல் வந்தது.

நீங்கள் கூறி அனுப்பியதை உரைத்தனன். அவ்வாறே ஆக்கிலைத்திருக்கிறேன். என் இவ்வளவு நேரம். ஆக்கி வைத்தது எல்லாம் ஆறிவிட்டதே'' என்றாள். அப்பொழுது மாயாண்டி தன் மனையாளை ''அடியே''!என்று அழைத்து வந்தபேர் வழிகளைச் சுட்டி ''இவர்கள் யார் தெரியுமா? இவர்கள் என் அண்ணன்மார். உனக்கு அக்தான் என்ற முறையுடையவர்கள் நமது வீட்டிற்குவிருத்தினராக வந்தனர்'' என்றான் அவளும் மிகவும் பயபக்தியோடு நடப்பவள் போல பாசாங்கு செய்து கொண்டாள். நிற்க மாயாண்டி முயல் அனுப்பியதும் பின் வீட்டிற்கு வந்து தனவன் மனைவியருடைய உரையாடலையும் கண்டு கொண்டிருந்த பேர் வழிகள் இருவரும் மூக்கின் மேல் விரலை வைத்து மிக மிக அதிசயத்து ஒருவன் ஒருவனைப் பார்த்து ''பார்த்தாயா மூயலின் அற்புதச் செயலை. இம்முயல் இல்லாவிட்டால் இவன் இவ்வளவு பணம் தேடமுடியுமா? இது ஒன்று இருந்தாலே போதுமே. இதை நாம் எவ்வளவு பணம் கொடுத்தாயினும் வாங்கிக்கொண்டே செல்லவேண்டும். பின் இந்த முயலால் எவ்வளவு பணமும் தேடிக்கொள்ளலாம்'' என்று கூறிக்கொண்டனர். இவர்கள் பேசுவதை உற்றுக்கேட்

டான் மாயாண்டி கேட்டவர் பல்கள் எப்படியும் நமது வலையில் சிக்கிக்கொள்வர் என்று இறுமாப்புற்றான். பின் உண வருந்தி முடித்தான். உடனே மாயாண்டி இரக்கின கம்பளத்தை விரித்து அதன் மேல் அவர்களே உட்காரச்செய்து பேசிக் கொண்டிருக்கும் பொழுது ஒருவன் "அண்ணே.....அந்த முயல்" — அதற்குள் மாயாண்டி "எனை முயலா? எதேது சமாச் சாரம் — இருந்திருந்து என்ன வார்த்தைச் சொன்னாய். அணைஞ்சு இருப்பதனால் இவ்வளவு பொறுத்தேன். இல்லேபேல் இதற்குள் கடவாய் பற்கள்....." என்றான்.

அடுத்தவன் "ஏன் அண்ணே இவ்வளவு கோபம். முயல் என்று சொல்வதற்குள் இவ்வளவு கோபமாயின் முயல் வேண்டு மென்று கேட்டிவிட்டால் பற்கள் உதிர்ந்து விடும் போலிருக்கிறதே. நீங்கள் எங்கள் அண்ணன் தானே. உங்களிடம் இருந்தால் என்ன? எங்களிடம் இருந்தால் என்ன? நீங் கள் எவ்வளவு பணம் கேட்டாலும் கொடு விடுகிறோம். இவ்வளவு தானே என்றான் உடனே மாயாண்டி என் உயிரைப் பிரித் தாலும் இந்த முயலைப் பிரிக்கச் சகியேன். அதனால் தான் அவ்வளவு கோபம் வந்தது. நான் கொடுக்க உடன்பட்டாலும் என் மனைவி உடன்படாள்" என்றான். "எப்படி யும் நீங்கள் சொல்லிச்சரிப்படுத்தி அவசியம் முயலைக் கொடுக்கவேண்டும்" என்றான் அந் தப் பேர் வழி. உடனே உள்ளே சென்று மனைவியைச் சரிப்படுத்தியது போல் வெளி வந்து "ஐயா இருபது ரூபாய் பொன் கொடுத்தால் முயலைக் கொடுக்கும்படி கூறு கிறாள் என்றான்" மாயாண்டி.

முயலின் மீதுள்ள பிரியத்தால் அதை வாங்குவதற்கு ஒத்துக்கொண்டார்கள். உடனே ஊருக்குப் புறப்பட்டுச் சென்றார் கள். தங்களுக்குரிய நிலம் புலம் முதலான வற்றை விற்றார்கள். எல்லாம் சேர்த்து இரு பதினாயிரம் பொன் வந்து சேர்ந்தது. அவற்றைக் கொண்டு வந்து கொடுத்து முய லைப்பெற்றுக் கொண்டு தம் ஊருக்குத் திரும்பினர். போகும்போது வழிப்பகை யைப் போக்குவதற்கு வழி தேடினர். அவர் களின் ஒருவன் ஒருவனைப் பார்த்து "என்ன? கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவது போலிருக்கிறதே. முய லைக் கும்போது நமக்கு என்ன கவலை" என் றான். அதைக் கேட்டவனும் அச்சரியமுற்ற மாயாண்டி கூறியதைப் போல் கூறி முயலின் மூளையில் தட்டிவிட்டான். முயலை மாயமாய் மறைத்தது. அன்று மாலை தம் வீடடிற்குச் சென்ற தஞ்சைப் பேர் வழிகள் தம் மனைவி மாரை அழைத்து "முயல் வந்தது?" என்ற னர். அவர்கள் இவர்களைப் பழித்து "ஏதற் காகத் தான் எல்லாம் விற்றுக்கொண்டு சென்றீர்களோ! அடவைத்தியமே" என்று எண்ணி கவலைப்படலானார். அதன் பின் னர் முயலைப் பற்றிப் பேச்சு எழாமல் அதிகாலை மாயாண்டியைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று புறப் பட்டனர்.

அவர் செய்கி அவ்வாசாக நமது மாயாண்டிக்கு அவர்கள் எப்படியும் வந்து விடுவார்கள் என்பது தெரியும். ஆதலால் அக்கணமே தன் மனைவியை அழைத்து "மூப்பிலவாங்கிக் கொண்ட அண்ணன்மார் நாளை இங்கே வந்து நம்மை அனுபுறுத்த வருவார்கள். அதற்குள் நாம ஓர் தந்திரம் செய்ய வேண்டும் நான் சொல்வதைக் கேள். நான் சமாதி அடைந்தது போல் கிட்டையில் அமர்வேன். நீ ஊராரிடம் சென்று என் கணவர் இருந்தார்ப் போல் சமாதியாகி விட்டார். சமாதியாகும்போது இந்த கூண்டில் அடக்கம் செய்யும்படி கூறினார் என்று சொல்" என்று கூறி அவ்வாறிடையிலிருந்தான். (அக்கூண்டிற் மேலில் சுவர்க்கம் உளது). அவளும் அவன் கூறியவாறு ஊராரிடம் தெரிவித்தாள். அவர்கள் வந்து இவன் சாலத்தைக் கண்டு அதிசயமுற்று பல்லக்கில் ஏற்றி வலம் வந்து அக்கூண்டில் அடக்கம் செய்தனர். அப்பொழுது உண்டியலில் வரவு வந்த பணம் மிக மிக அதிகம். அவற்றையும் அவள் எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டாள். மறுநாள் தஞ்சையிலிருந்து ஆசாமிகள் வந்து வீட்டு வாயலில் நின்று மாயாண்டியின் மனைவியை அழைத்து "அண்ணன் எங்கே?" என்றனர். அவள் அழுது கொண்டு முயலைப் பிரிந்த தினுலே! என்னவோ அவர் நீங்கள் அப்புறம் போனதும் சமாதியாகி விட்டார். இக்கூண்டில் தான் அடக்கம் செய்திருக்கிறார்கள் பாருங்கள்" என்றாள். அதனை உண்மையாக நம்பி ஒருவன் போய் உற்று நோக்கினான். உள்ளிருந்த மாயாண்டி ஒற்றைக் கையால் அவன் மூக்கைப் பிடித்து மற்றொரு கையால் தன்னிடம் இருந்த கத்திரிக்கோலால் அவன் மூக்கை கத்திரித்து விட்டான். மூக்கு அறுபட்டவன் முகத்தை மூடிக்கொண்டு வெளியிட்டாள் வெட்கம் என்று ஆம் ஆம் என்று தலையாட்டிக்கொண்டே வெளிச் சென்று விட்டான். இரண்டாம் அவனும் அவ்வாறே வெளிச்சென்றான். பின் இருவரும் சந்து பேசும்போது இருவர் மூக்கும் அறபட்டது அறிந்த சந்தியாசியாக போய் விட்டனர். நிற்க,

இதன் பின் மாயாண்டியும் அவன் மனைவியும் இவ்வூரில் இனியும் இருக்கல் நமக்குடி உடைபடும் என்று அறிந்து அன்றிரவே பொருள்களை எடுத்துக்கொண்டு வேற்றூர் சென்றனர். செல்லும்போது இளைப்பாடியால் வழி தெரியாது ஒரு பாழும் கிணற்றில் இருவரும் வீழ்ந்து இறந்தனர். இதுதான் மலைவிழுங்கி மாயாண்டியின் முடிவு.

அன்பர்களே இதனை உயர்ந்த கதை என்று மனதில் கொள்ளலாகாது. இதனால் அறியப்படுவன,

(1) பூட்டுக்களை நம்பலாகாது.

(2) பிறரை ஏமாற்றி பிழைக்கலாகாது.

(3) பேராசை கொள்ளலாகாது.

(4) கொள்ளையடித்த பணம் நிற்காது. அடித்தோனையும் அழிவிக்கும் என்பன போல பல நீதிகளாம்.

சுபம்.

'ஜீவகாருண்யம்'

(தொடர்ச்சி)

[G. முத்தையா]

(11) நடந்து நடந்து காலுஞ் சோர்ந்து — கேட்டுக் கேட்டு வாயுஞ் சோர்ந்தது, — கீனைத்து கீனைத்து மனமும் சோர்ந்தது — இனி இப்பாவி வயிற்றுக்கென்ன செய் வோம் என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழை களுக்கு ஆகாரங்கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே — ஜீவகாருண்யம்.

(12) கண், கை, கால் முதலிய உறுப்பு களிற் குறைவில்லாதவர்களாகி ஆகாரஞ் சம்பாதிக்கத் தக்க சக்தியுள்ளவர்களும், பசியால் வருந்தி இதோ படுத்திருக்கின்றார் கள். குருடும் செவிடும் ஊமையும் மூடமு மாக விருக்கின்ற நமக்கு ஆகாரம் எந்த வழி யாற் கிடைக்கும் — பசி எப்படி நீங்கும் — என்று தனித்தனி கீனைத்து கீனைத்துக் கஷ்டப்படுகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்குவதே — ஜீவ காருண்யம்.

(13) பசியினால் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும் எந்தச் சமயத் தாராயினும் — எந்த ஜாதியாராயினும் — எந்த செய்கையாராயினும் — அவர்கள் தேச வொழுக்கம், சமய வொழுக்கம் ஜாதிவொழுக் கம், செய்கை வொழுக்கம் முதலான வைகளைப் பேதித்து விசாரியாமல் — எல்லா ஜீவர்களிடத்தும் கடவுள் வினைப்பொது வாக விளக்குவதை அறிந்து பொதுவாக பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்க படி அவர்கள் பசியை சீவிர்த்தி செய்விப் பதே — ஜீவகாருண்யம்.

(14) இதனால் அறிவு விளங்கிய ஜீவர் களுக்கெல்லாம் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடென்றும் அறியப்படும். அன்றியும்; ஜீவகாருண்ய வொழுக்கத்தை உடையவர் களாகி அருந்தல் பெருந்தல் முதலிய பிர பஞ்ச போகங்களை அனுபவிக்கின்ற சமுசாரி களெல்லாம் சர்வ சக்தியுடைய கடவு ளருளுக்கு முழுவதும் பாத்திரமாவார்கள்.

கடவுளுடைய பெருமையின் தத்தையும் நம்முடைய சிறுமையின் தத்தையும் ஊன்றி விசாரித்தால் அன்னிய உயிர்களுக்கு இம் சை உண்டாகாது நடத்தலே ஜீவகாருண்ய த்தின் லாபம் அன்பு — ஆகலால் இதைப் பாதுகாத்தல் வேண்டும்.

கைத்தொழிற் கலை!

(S. I. முத்து)

செல்வர்காள்!

கல்வியின் பயனை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அக்கல்வியானது ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி, கலாசாலைக் கல்வி, என்ற மூன்று படிகளாயுள்ளது. இதில் உயரிய கல்வி பயின்று பி. ஏ முதலிய பட்டங்கள் பெற்றவர்களும் தொழிற்படிப்பின்றி சர்க்கார் உத்தியோகத்தில் 'போஸ்ட்மேன்' வேலை தவிர மேலை எவ்வித உத்தம தொழிலுக்கும் தகுதியற்றவர்களாயிருக்கின்றனர். தற்காலத்தில் படித்தவர்களில் பலர் ஜீவனோபாயத்திற்காக வேலை கிடைக்காமல் திண்டாடுகின்றனர். வறுமை நீங்கி, நம் நாட்டின் பொருளாதாரம் மேலோங்க வேண்டுமாயின் நம் பையன் ஒவ்வொருவரும் ஏதாவதொரு தொழிலைப் பயின்று தானே இயற்ற வேண்டும். தொழிற் பயிற்சியே மேன்மைதரும். மிச்சியை ஒதுக்கும்.

மேனாடுகளில் அறிவு வளர்ப்பதற்கான நூற், கல்வி புகட்டுவதுடன் அவர்களுக்கேற்ற தொழிற் கல்வியும் கற்பித்து வருகின்றனர். இதைத் தவிர பிரத்தியேகமான பெரிய தொழிற்சாலைகள் நாடெங்கும் நிறுவப்பட்டு, கைத்தொழிற் கலையை நன்கு காப்பாற்றுகிறார்கள்.

நமது நாட்டிலோ சிற்சில இடங்களில் தான் தொழிற்கல்லூரிகள் அமைத்துள்ளன. கைத்தொழில்களைக் குறிப்பிட இயற்கை அழகு கலைகளும், கைத்தொழிற்சாலைகளும் அமைத்து தொழிற்கலையை நன்கு வளர்க்கவேண்டியது நாமும், அதிலே சகோதரர், சகோதரியர் என்ற வேறுபாடுகளைக் கண்காணிப்பதிலும் சிறந்த பேறாகும்.

பொதுவாக நம்மவர்களுள் ஒரு கோடிக்கு மேற்பட்ட எண்ணம் திருவி வருகிறது. கைத்தொழில் செய்து வாழ்வது இழிவென்றும், நகத்தில் மண்படாமல் சுக ஜீவிதராய், வாழ்வதே மேன்மையென்றும் நமது கனவான்களில் பலர் நினைத்து வருகின்றனர். இந்த தொழில் பெருக்கத்திற்குப் பெரும் தடையாக இருக்கின்றது. உழைப்பின் சிறப்பை நன்கு உணர்ந்த மேனாட்டார், தொழில் வளர்ச்சியும், செல்வப் பெருக்கமும் பெற்று உலகத்தில் முன்னணியில் நிற்பதை நாம் கண் கூடாகக் காண்கிறோம்.

"கோடீசுவரனும் குறவனும்" என்ற கதையை நம்மில் பலர் அறிந்திருக்கலாம். ஆனால் அதன் உண்மைக் கருத்தை உற்று நோக்குபவர் சிலரே யாவர்.

தனிமையான தீவில் விடப்பட்டபொழுது ஒரு தொழிலும் அறியாத கோடீசுவரன் பிழைக்க வழியின்றித் தவித்து நிற்க, கைத் தொழில் பயிற்சியுள்ள குறவன் கூடை முடைந்து தனக்கின்னல் செய்த அப்பிரபுவையும் காப்பாற்றவில்லையா? உழைப்பின் உயர்வை உணர்ந்து ஒவ்வொரு ஆண் மகனும், பெண் மகளும், மக்களுக்குப் பயன் படக்கூடிய ஏதாவதொரு கைத்தொழிலைச் செல்வனே கற்றிருந்தால், வறுமை வந்துற்ற காலை, அதை நீக்கிச் சுகமாக வாழ்வதற்கு அத்தொழில் பெரிதும் துணைபுரியும். ஆதலால் கைவினை பயிலுங்கள்.

கட்டுரையின் தலைக்கத்தில் வாசகர்களை 'செல்வர்காள்' என்று அழைத்திருக்கிறேன். அந்த அடைமொழி மிகப்பொருத்தமான தே. நம் நாட்டில் உள்ள மக்கள் நாட்டின் செல்வமே. அவர்களுடைய தொழிலாற்றும் திறனும், மன உழைப்பும் திரவியம் ஈட்டுதற்குக் காரணமாக இருப்பதால் அந்த சக்தியும் செல்வமே. கேவலம் ரூபாய், அணா, பைசா மட்டும் தான் செல்வமாகுமென்று நினைப்பது தவறு. நிலம், காடுகள், கால் நடைகள், சாலியங்கள், கனிஜவஸ்துக்கள், தொழிற்சாலைகள், இயந்திரங்கள், கல்வி, கைத்தொழில்கள் — இவையும் ஒரு நாட்டின் செல்வமே.

பண்டைத் தமிழர், நாட்டின் செல்வத்தை மலைத்திரவியம், காட்டுத் திரவியம், நாட்டுத் திரவியம், கடல் திரவியம் என நான்கு வகைப்படுத்தியுள்ளனர். பருத்தி முதலிய வீணைபொருட்களிலிருந்தும், இயற்கைப் பொருட்களிலிருந்தும் அளவற்றசெயற்கைப் பொருட்கள் உண்டாக்கப்படுகின்றன. நம் இந்திய நாடானது இயற்கைப்பொருட்களை அயல் நாட்டிற்கு அனுப்பிவிட்டு, அம்மூலப் பொருட்களைக் கொண்டே ஆக்கப்பட்ட செயற்கைப் பொருட்களை மிகுதியாக இற்க்குமதி செய்தல் இந்தியாவது வறுமைக்கு ஒரு காரணமாகும். காகிதம், எழுதுகோல், மசி, சாயம், விளக்கு வகைகள், மருந்து தினி இயந்திரங்கள்—முதலிய பல்வேறு வகையான சாமான்களும் அயல் நாட்டிலிருந்து பெறுகிறோம். இதிலிருந்து தொழிற் பயிற்சியில் நாம் மிகவும் பிற்போக்கான நிலைமையிலிருக்கிறோம் என்று நன்கு புலனாகிறதல்லவா? இந்த இகழ்ச்சி மொழிகள் நம் காதில் நாராசம் போல் பாயவில்லையா?

எனவே நாம் மட்டும் முயற்சிப்போமாகில், இயற்கைப் பொருட்களும், மூலப் பொருட்களும் மலிந்துள்ள நமது நாட்டில் பல கோடி வகைச் செயற்கைப் பொருட்களையும் ஆக்குதல் அரியதொருகாரியமா? அதனால் நமது நாடு செல்வம் கொழிக்கும். நாமும் கனமரிப்புப் பெறுவோம். இதைத் தொழிற்கலையைப் பற்றி பாரதியார் பாடிய "ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்" என்ற பாடலை மனதிற்கொண்டு தேசத்தில் கைத்தொழிற் கலையை ஓங்கச் செய்யப்பாடுபடுமாறு வேண்டுகின்றேன்.

பொங்கல் நினைவுகள்.

[த. ரா. சுப்பிரமணியம்]

மனித உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இன்று போரும் போரைப் பற்றிய பேச்சுமாயிருக்கிறது. எங்கே பார்த்தாலும் அமைதியின்மை, வருங்காலத்தைப் பொறுத்த வரையில் கவலை, பயம், இன்னிலையில் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன என்றாலும் அவையும் போரில் வெற்றியைக் குறிக்கும் விழாக்களே ஆனால் மனித உலகத்தை விட்டு இயற்கைமீது நம் பார்வையைச் செலுத்துவோம். இயற்கையின்னே சிறிதும் பிறழாமல் தன் பருவக்காலங்களோடு மனிதனுக்கும் பிறவுயிர்களுக்கும் இன்பமளிப்பதில் சலிப்பற்றவளாகக் காணப்படுகிறாள். இயற்கையின் பருவக்காலங்களோடு மனிதன் கொண்டாடும் விழாக்களும் சூழன்று வந்து கொண்டிருக்கின்றன.

"பொங்கல்" என்பது பருவக்காலவிழாக்களிலெல்லாம் தலை சிறந்தது. இது தமிழுக்குச் சிறப்பாக அமைந்தது. இன்பத்தையும், அமைதியையும், மனித வாழ்விற்கும் இயற்கைக்குமுள்ள ஒற்றுமைனயுமே தன் கருத்தாக உடையது. போராயினும் சரி, பஞ்சமாயினும் சரி தமிழனில் பரம யேழை ஒருவனுகூட இந்தப் பண்டிகையைக் கொண்டாடத் தவறமாட்டான். இது சரியாகக் கொண்டாடப்பட்டால் தான் வருஷம் முழுவதுமே சரியாகப்போகுமென்பது அவன் ஆழ்ந்த நம்பிக்கை. தமிழனே நன்று உன் நம்பிக்கை நீ உன்னுடைய மனைவி மக்களுடனும், இஷ்டபந்துக்களுடனும் உன் திறத்திற்குத் தகுந்தபடி பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகிறாய்..... இதற்கு நீ பெரும் செல்வவந்தனுக இருக்க வேண்டுமென்பதில்லை, என்பதை நீ உணர்ந்தாய். வாழ்க்கையின்பம் பணத்தைப் பொறுத்தல்ல என்பதை உன்னிடத்திலிருந்து செல்வந்தர்கள் தெரிந்துகொள்ளட்டும்.

"பொங்கல்" என்றதுமே நம் நினைவு நம்மைக் கிராமங்களுக்குக் கொண்டு செல்கிறது. அவைகளில்லவா நம் நாட்டு மக்களில் முக்கால் வாசிக்கு மேலுள்ளவர் வசிக்கிறார்கள்? நம் கிராமங்களை நினைக்கும்போது, அவைகளைத் தன் மடியில் அன்புடன் தாங்கும் இயற்கையன்னையின் நினைவு நமக்கு வருகிறது, இயற்கையோ இறைவன் நினைவைத் தூண்டுகிறாள் ஆகையினால் எப்போதுமே நம் எண்ணங்கள் கிராமங்களிலேயே பதிகின்றன. "பொங்கல்" தினத்

திற்கு முன்னே நாள் மாலை நாம் நாட்டுப் புறத்தின் வழியாகக் கிராமத்திற்குச் செல்லும் சாலையில்சென்று கொண்டிருப்பதாக நினைத்துக் கொள்ளுவோம். நமக்குச் சற்று முன் னும் பின் னுமாக அதே சாலை வழியாக ஒரு கூட்டம் ஆட்கள் போய்க்கொண்டிருப் பதைப் பார்க்கலாம் இவர்களில் கிடைத்த கிராமுள்ள வாலிபர் சிலர், வயோதிகர் சிலர், இளம் பெண்கள் சிலர், குழந்தைகள் சிலர். இவர்களெல்லாம் சந்தையிலிருந்து பொங்க லுக்கு வேண்டிய பண்டங்களை வாங்கி வீடு திரும்புகிறவர்கள். குழந்தைகளுக்குப் பணி காரம் விளையாட்டுச் சாமான்கள், பெண் களுக்குப் பூக்கள், பட்டாடை முதலியன வை, கரும்பு, பழம், தேங்காய், மஞ்சட்குலை, இவைகளைக் கையில் எடுத்துக்கொண்டும் கூடை பெட்டிகளைத் தாங்கியும் செல்கிறார் கள். ஒருவர்கூடத வெறுங்கையோடு செல் வதை நாம் பார்க்கவில்லை

ஆனால் இதென்ன ஒவ்வொருவரிடமும் ஒரு பானை காணப்படுகிறது. தனக்கு இயல் பாக உள்ள செந்நிறத்தோடு செவ்வானத் தின் ஒளியும் தன் மீதுபடவே கூடைந்த பவளம் போல் இலங்கின்றது இந்த மண் ணின் கலம். இதன் கழுத்தைச் சுற்றியும் வயிற்றின் மேலும் இவையென்ன வண்ணச் சித்திரங்கள் — இலை அடர்ந்த வாழை — தென்னை, இதோ ஒன்றில் ஒரு வாலிபனின் உருவம் வரையப்பட்டிருக்கிறது. அடித் தாம்பூல ஒரு இளமங்கையின் ஓவியம். புட்களின் உருவம் — கலையின் சித்திரம் ஹா! இதுவோ பொங்கற் பானை. ஹே பொங்கற்பானையே; நான் உன்னைப் பற்றிக் கேட்டிருக்கிறேன். இப்பொழுது நான் உன்னைப் பார்க்கிறேன் உன் பவளம் போல் சிவந்த மேனியில் விளங்கும் சித்தி ரங்களுடன், பச்சை குத்திய மேனியையு டைய ஒரு இளவழகியைப் போல், நீ எனக்குக் காட்சியளிக்கிறாய். இப்பொழுது நீ எனக்குக் காட்சியளிப்பது போலவே உன்னைப் போன்ற "கிரேக்க"ப் பாலிகை யொன்று ஆங்கிலக்கவி "கீட்ஸ்" என்பவ ருக்கு முன் ஒரு நாள் காட்சியளித்தது. ஆனால் அவர் ஒரு மஹாகவி அழிவற்ற ஒரு தனிப்பாவினால் அதன் அழகை உலகத்தார் அறிந்து இன்புறும்படி பாடி னர். உன்னிடம் ஒரு சிறிதும் அழகில் மிஞ்சாத சீனத்துப் பாணிகளுக்குத் தான் வந்த வரிசை யென்ன. அவைகளைச் சீனர் களும் போற்றுகிறார்கள். அவை மேல் நாட்டுக் கலைகளின் மாளிகைகளிலும் இடம் பெறறன. உன்னையோ தமிழ்க்கவி ஒருவனும் பாடவில்லை. தமிழ்ச் சீமான் கள் தங்கள் மாளிகைகளில் உன்னை வைக்க வுமில்லை இதற்காக நீ வருத்துகிறாயோ என்றால் அதவும் இலலை தமிழ் காட்டில் ஆயிரக்கணக்கான ஏழைகள் தங்கள் குடி சைகளில் உன்னை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கிற வரைக்கும் நீ வருத்தப்படவும் வேண்டாம்.

வெற்றி விழாக்களும், இறுதி வெற்றி விழாக்களும் கொண்டாடப்படும் இன்னுட்களிலும் பொங்கல் வரத்தான் செய்கிறது — பொங்கலைக் கொண்டாடத் தான் செய்கிறார்கள். ஏன், பொங்கலே ஒரு வெற்றி விழா என்று கூடச் சொல்லலாம். இது கதிரவன் வெற்றியைக் குறிக்கும் கொண்டாட்டம் அதனால் தான் இந்த பண்டிகையில் சிறப்பாகக் கண்களுக்கு இன்பமளிக்கும் அம்சங்கள் அமைந்திருக்கிறது. பரமஏழை கூடத் தன் மண் குடிசையைப் புதுக்கி, வெண்சாந்து பூசி, செம்மண் கோலமிட்டு, அழகு பெறச்செய்கிறான் பெண்கள் வீட்டு முற்றங்களைப் பல நிறத்திலும், பல வகையிலும் அமைந்த கோலங்களால் சித்திரப்பாய் விரித்தது போல அலங்கரிக்கிறார்கள். இந்தக் கோலங்களில் புலனாகும் நம் பெண்களின் ஓவியத்திறமை வியப்பைத் தருவது இவ்வளவு புலமை இதுவரை எங்கே பதுங்கிக் கிடந்தது? வாழ்க்கையின் ஓயாத சிறு கவலைகள், வறுமை, துயரம், இவையெல்லாம் சேர்ந்தும், இந்தத் திறமையை அவிக்கமுடியவில்லையே — ஹா! ஒவ்வொரு குடிசைக்கு முன்னால் என்ன அபாரமான விருந்து பரிமாறப்பட்டிருக்கிறது. நம் பொது மக்களிடையே ஊறிக்கிடக்கும் சிருஷ்டித் திறமைக்கும், சௌந்தர்ய தாகத்திற்கும் ஒரு அளவுகோல் உண்டோ?

பொங்கல் நாள் புலர்ந்தது. காலை நீராடிக் கதிரவனை வழிபடுகிறார்கள். சர்க்கரை யிட்ட செங்கல்லின் சோற்றையும், கரும்பு வாழைக் கனிகளையும் அவனுக்கு நிவேதனமாக வைக்கிறார்கள். அப்பொழுது பெண்களின் குரவையொலி நாற்றிசையிலும் எழுகிறது. அது பறவைகளின் காலைப்பாட்டோடியோடு கலந்து இன்ப மயமாய் ஒலிக்கிறது. இந்தக் குரலை நம் பெண் பாலருக்கு இயற்கையாக அமைந்த உலகவிளி. இதைப் போல் செவிக்கு இன்பம் பர இன்னொரு இசை உண்டு என்றால் அது நம் தமிழ்த்தாயின் தாலாட்டிசை யொன்றுதான். தமிழ்த்தாயே! மகளுகரமான உன் குரவையின் ஒலி மண்ணிலும் விண்ணிலும் பரவிற்று. அது இயற்கைக்கு இறைவனின் செவிகளில் கேட்டது. நீ எப்படி உன் குழந்தைகளுக்கு அன்புடன் அளித்திருயோ, அதே போல் இயற்கையன்னையாகிய பரா சக்தியும் உனக்களிப்பாள்.

பொங்கல் பொங்கியாய்விட்டது. கதிரவன் வழிபாடாயிற்று. ஆனால் இன்பொங்கல் பூர்த்தியானதாக ஆகாது, ஏனென்றால் இந்தப் பண்டிகை மனிதனுக்கு மட்டிலும் அமைந்த ஒன்றல்ல. தமிழன் தன் மகிழ்ச்சியில், தன்னையண்டின பிற உயிர்களையும் பங்குகொள்ளச் செய்கிறான் அப்பொழுதுதான் பொங்கலின முழுமுக்கியத்தும் நிறைவேறினதாக அவனுக்குத் தோன்றுகிறது. இந்த உத்தேசத்துடனே பொங்கலுக்கு மறுநாள் இன்னொரு கொண்டாட்டம் பிறக்கின்

றது. இதிலும் ஒரே வர்ண விருந்தால் காலையில காக்கைகளுக்குச் சோறிடுவது என்பது ஒரு சுப்பிரதாயர். மஞ்சள், சிகப்பு, முதலிய நிறங்களில் சோற்றுருளை களைத் தயார்செய்து முற்றத்தில் ஆடுகி வைத்தி காக்கைகளைக் கூப்பிடுகிறார்கள். காக்கைக்கு நிறங்களில் உள்ள மோகம் வெளிப்படை. அவை மிளகாய்ப் பழம், சிவந்த துணிக் கிழிசல்கள் கூடுதத் தண்டு கள் இவைகளைக் கொத்திச் செல்வதை நினைத்துப் பார்த்தால் இது நன்கு விளக் கும் ஏற்கனவே தின் பண்டங்களை தணிந்து திருடித் தின்னும் காக்கை நிறங் கலந்த சோற்றுருளைகளை அவாவுடன் கொத் திச் செல்வதற்குக் கேட்கவும் வேண்டுமா இந்தக் காட்சியைக் கண்டு சிறுவர் குறுமி யர்களிகூறுகிறார்கள்.

மாலையில் சென்று காலிகளைக் குளிப் பாட்டி அவையின் கொம்புகளிலும் நெற்றி யிலும் அழகிய வர்ணைகளைப் பூசுகிறார்கள். அவைகளுக்கும் பொங்கல் சோறு வழங்கு கிறார்கள். மாலையில் அவைகளைக் கட டவிழ்த்து விடுகிறார்கள். மாலை இளவெயி லில் அவை கூட்டங்கூட்டமாகப் புழுதி யைஎழுப்பி ஓடித் திரிவதைம, அவைகளுக் கிடையே சிறுவர்கள புகுந்து அவைகளின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் கரும்புத் தண்டுகள், பனங்கிழங்குகள் முதலியவை களைப் பிடித்திழுத்துப் பறிப்பதையே பொங் கல் கொண்டாட்டத்தில் இமுதிக் காட்டி கள். இதுவும் மிகப் பொருத்தமானது தான். இதுவும் இறைவன் தினைவை யூட்டு வதுதான். ஆயர்களில் ஒருவனாய், ஆனி ரைமேய்த்த நாமாயன் நினைவை யூட்டுவது அவன் தாத்தற் கடவுள். உயிர்களிடத்தை யும் தன்னுள் வைத்த பரிதியை அவன் தன்னகத்தே அடக்கினான். ஆகையினால் எல்லா உயிர்களும் அவனைத் தாம் "உண் ணும் நீரினும் உயிரினும்" இனியவனைக் கண்டு களிப்புறும்.

தபால் தலை ஒட்டுமிடம்.

"கலை மலர்" கட்டுரைப் போட்டி நம்பர் 1.

கட்டுரையாளரின்

முழுப் பெயர் விலாசம்.

கட்டுரைப் பெயர்:

இத்துடன் 2 அணாத் தபால் தலை அனுப்பியிருக்கிறேன். கட்டுரையைத் தேர்ந்தெடுக் கும் போட்டிப் பரிசு கொடுப்பது சம்பந்தமாய் ஆசிரியரின் முடிவையே ஒப்புக்கொள்கிறேன்.

2—44. கட்டுரையாளர் கையொப்பம்.

"இளம் எழுத்தாளர்களுக்கு"

அரிய ஓர் வாய்ப்பு! சிறந்த வாய்ப்பு!

கலைமலரில் கட்டுரைப்போட்டிகள்.

போட்டியுள் வெற்றி பெறுவோருக்குப் பரிசு.

"குடிசைக்கைத்தொழிலால் அதிக சாமான்களை உற்பத்தி செய்ய கூடுமா அன்றி இயந்திரத்தொழிலால் அதிகப்பொருளை உற்பத்தி சேய்ய கூடுமா" இதைத் தலைப்பாகக்கொண்டு சிறந்த காரணங்காட்டி தான் எடு துக்கொண்டதைப்புள்ளி விபரங்களுடன் உறுதிப்படுத்து வோருக்கு ரூபாய 5 பரிசளிக்கடபடும்.

கட்டுரைப்போட்டி சம்பந்தமான விதிகள்

——:o:——

1. கட்டு எழுதுவோர், கட்டுரைகளை மையால், திருத்தமாகவும் தெளிவாகவும், குவில் வாசிக்கும்படி அமைந்ததாகவும் எழுதிப் "போட்டி ஆசிரியர் கலைமலர்" என்ற விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

2 கட்டுரையின் விஷய நுட்பம், சம்பந்தமாக 50% மார்க்கு கொடுக் கப்படும்.

3. பொருள், பொருத்தம், பாரா இணைப்பழகு, விஷயக்கோர்வை யமைதி இவற்றிற்கு 25% தரப்படும்.

4. இலக்கணம், எழுத்து வடிவம், வாக்கியச்சேர்க்கை: இவை 25% பெறுக்.

பிரசுரிக்காத கட்டுரைகளை வேண்டுவோர் 2 அணைத்தபால் தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.